# கடலூர் மாவட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்ற நிகழ்ச்சிகள் !



கடலூரில், நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட அளவிலான அரசு ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகை தந்த போது, கடலூர் மேற்கு மாவட்டக்கழகம் சார்பில் விருத்தாச்சலம் கடைவீதி பாலக்கரை பகுதிகளில் ஆயிரக்கணக்கானோர் திரண்டிருந்து உற்சாகமிகு வரவேற்பளித்த காட்சி!



கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியின் போது, வருவாய்த்துறை, மகளிர் திட்டம், வேளாண் துறை, மாற்றுத்திறனாளிகள் நலன், சமூக நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன், மக்கள் நல்வாழ்வுத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் ரூ.15 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 909 பயனாளிகளுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சி.வெ.கணேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் சபா ராஜேந்திரன், கோ.அய்யப்பன், தி.வேல்முருகன், சிந்தனைச் செல்வன் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.






தி.மு.கழக இளைஞர் அணியின் 2ஆவது மாநில மாநாட்டின் ஏற்பாட்டுக்காக மாவட்டந்தோறும் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்று வருகிறது. 10ஆவது கூட்டமாக கடலூர் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டங்களுக்கான செயல்வீரர்கள் கூட்டம் வேப்பூர் கழுதூரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக இளைஞர்அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார். அமைச்சர்கள் - மாவட்டச் செயலாளர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சி.வெ.கணேசன் உள்ளிட்டோர் மேடையில் உள்ளனர். இந்திய ஒன்றியத்தின் பன்முகத்தன்மையை காப்பதற்கான போரில், கழகத்தின் வாளும் கேடயமுமாக திகழும் நம் இளைஞர் அணி மாநாட்டை வெல்லச் செய்வோம்! 2024 மக்களவைத் தேர்தலுக்கான திசைவழியை தீர்மானிக்க, டிசம்பர் 17 அன்று சேலத்தில் சங்கமிப்போம்! என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.


